

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, முன்னிலையில் நேற்று (25.08.2025) நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமையாசிரியர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு, பேசினார்கள். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி உட்பட பலர் உள்ளார்கள்.

### திருவொற்றியூர் தியாகராஜசுவாமி கோயிலுக்குச் சொந்தமான

# ரூ.24 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை தகவல்!

சென்னை, ஆக.26

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று (25.08.2025) சென்னை, திருவொற்றியூர், தியாகராஜசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.24 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் வெள்ளிவாயல் கிராமத்தில் திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான (வேப்பங்கொண்டா ரெட்டிபாளையம்) சர்வே எண்.213ல் 6 ஏக்கர் 32 சென்ட் மற்றும் சர்வே எண்.214ல் 4 ஏக்கர் 63 சென்ட் ஆக மொத்தம் 10 ஏக்கர் 95 சென்ட் விஸ்தீரணம் கொண்ட திருக்கோயில் நிலங்கள் உள்ளன.

இதனை ராமநாதரெட்டியார், கிருஷ்ணன், தசரதன் ஆகிய மூவரும் 2004 ஆம் ஆண்டு குத்தகை காலம் முடிவுற்றும், திருக்கோயில் வசம் சுவாதீனம் ஒப்படைக்காமல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திருக்கோயில் நிர்வாகம் உரிமை கோராமல் இருக்கவும், தாவா சொத்தினை அவர்கள் அனுபவிப்பதற்கு எவ்வித இடையூறு ஏற்படாமல் இருக்கவும், நிரந்தர உறுத்து கட்டளை பிறப்பிக்க கோரிய அசல் வழக்கு மற்றும் மேல்முறையீடு வழக்குகளில் திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இச்சொத்தினை மீட்பதற்கு உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர் செல்வி கே.எஸ்.நற்சோணை முன்னிலையில், நேற்று (25.08.2025) வருவாய்துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி, திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.24 கோடியாகும். இந்நிகழ்வின்போது வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) சத்தியேந்திர ராஜ், ஆய்வாளர் திருமதி அறிவுச்செல்வி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.



சென்னை, டி.எம்.எஸ்.வளாகம், சீர்மரபினர் நல வாரியக் கூட்டரங்கில் நேற்று (25.08.2025) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரும் சீர்மரபினர் நல வாரிய தலைவருமான சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் சீர்மரபினர் நல வாரியத்தின் மூன்றாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளர் இ.சரவணவேல்ராஜ், சீர்மரபினர் நல வாரிய துணைத் தலைவர் திரு.இராசா அருண்மொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் முனைவர் சீ.சுரேஷ் குமார், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் திருமதி வ.கலைஅரசி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள், சீர்மரபினர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.






## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

## முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஜவ்வாதுமலை தெற்கு ஒன்றியம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



அனக்காவூர் மேற்கு ஒன்றியம், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



வெம்பக்கோட்டை மேற்கு ஒன்றியம், விருதுநகர் தெற்கு மாவட்டம்.



காளையார் கோவில் தெற்கு ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.



பாப்பிரெட்டிப்பட்டி பேரூர், தருமபுரி மேற்கு மாவட்டம்.



மணப்பாறை நகரம், திருச்சி தெற்கு மாவட்டம்.



நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



துறையூர் மேற்கு ஒன்றியம், திருச்சி வடக்கு மாவட்டம்.



பேர்ணாம்பட்டு நகரம், வேலூர் மாவட்டம்.